**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : CC 27/2022**

**Prosecution witness : அ.சா.7** **Date : 09.01.2025.**

| | |
|---|---|
| **Name : சாந்தி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**முதல் விசாரணை**

1) நான் தற்போது புதுக்கோட்டை மாவட்டம், மீமிசல் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2021ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 31.10.2021 ம் தேதி காலை 11.00 மணிக்கு இவ்வழக்கில் நான் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, சேலம் அரசு மருத்துவமனையில் இருந்தது கிடைக்கப் பெற்ற காயத்தகவலின் பேரில் மேற்படி மருத்துவமனைக்கு பெண் காவலர் ரேணுகாசக்கரவர்த்தினி என்பவரை அனுப்பி அவர் அங்கு சென்று அங்கு உள்நோயாளியாக இருந்த மயிலி க/பெ மாரியப்பன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து என்பவம் ஒப்படைத்ததன்பேரில் வாக்குமூலத்தின் தன்மைக்கேற்ப ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண். 580/2021 ச/பி294(பி) 323, 324 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை சட்டம் பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

3. பிறகு புலன் விசாரணை அதிகாரி ஆகிய நான் புலன் விசாரணை நகலை எடுத்துக்கொண்டு கடந்த 31.10.2021 ம் தேதி மதியம் 1.00 மணிக்கு சம்பவ இடம் ஜலகண்டாபுரம் ஆவடத்தூர் குழந்தைநகர், மாதையன் வீட்டருகில் சென்று சாட்சிகள் முருகன் மற்றும் கந்தசாமி ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். பார்வை மகஜர் மற்றும் வரைபடம் **அ.சா.ஆ 4** மற்றும் **அ.சா.ஆ 5** ஆகும்.

4. பின்பு சாட்சிகள் மயிலி, சித்ரா, கருப்பண்ணன், பாலகிருஷ்ணன், பேபி, முருகன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் 4 வது எதிரி மாதேஷ் என்பவர் குற்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்று தெரியவந்ததால் இந்த வழககில் இருந்து நீக்கம் செய்யப்பட்டு எதிரி நீக்கல் அறிக்கை தாக்கல் செய்தேன். எதிரி நீக்கல் அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். இவ்வழக்கில் காயமடைந்த மயிலி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் மோகனவேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, விபத்து பதிவேடு பெற்றேன். இவ்வழக்கில் காயமடைந்த மயிலி என்பவருக்கு ஏற்பட்ட காயம் மருத்துவர் கருத்துரைப்படி கொடுங்காயம் என சான்று வழங்கப்பட்டது.

5. இவ்வழக்கின் எதிரி ஈஸ்வரன் கடந்த 31.10.2021 ம் தேதி கைது செய்யப்பட்டு தக்க வழிக்காவல் மூலமாக நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டனர். மற்ற எதிரிகள் சுமதி மற்றும் பச்சியம்மாள் இருவரும் நீதிமன்ற பிணையில் விடுவிக்கப்பட்டார்கள்.

6. இவ்வழக்கின் புலன் விசாரணையில் எதிரிகள் மீதான குற்றம் உண்மை எனத் தெரிய வந்ததால் எதிரி மீது கடந்த 21.12.2021 ம் தேதி குற்றஎண். 580/2021 ச/பி294(பி) 323, 324 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை சட்டம் பிரிவில் இல் இருந்து ச/பி 294(பி) 326, 352 இதச மற்றும் பிரிவு 4 தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை சட்டம் பிரிவில் ஆகிய பிரிவுகளின் கீழ் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.7** ஆகும்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–**</u> இல்லை

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.